பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

18 10 2025 SATURDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஜி.7 நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தகம் 60 சதவீதம் அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியாவின் வளர்ச்சி இயந்திரமாக வடகிழக்கு மாநிலங்கள் திகழ்வதாக மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

3. லடாக் வன்முறை தொடர்பாக நீதி விசாரணைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

4. வங்கிக் கடன் மோசடி வழக்கில் தேடப்பட்டு வரும் வைர வியாபாரி Mehul Choksi-யை இந்தியாவுக்கு நாடு கடத்த பெல்ஜியம் உச்சநீதிமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

5. 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டிக்கு இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

>>>>>><<<<<

ஜி.20 நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தகம் 60 சதவீதம் அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்தியாவின் வளர்ச்சியை யாராலும் தடுத்து நிறுத்தமுடியாது என்று கூறினார்.

பல்வேறு தடைகளை மீறி, 140 கோடி இந்தியர்களும் முழு உத்வேகத்துடன் முன்னேறுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

சமீபத்தில் பிரிட்டன் பிரதமர் திரு. Keir Starmer மிகப் பெரிய வர்த்தக குழுவுடன் இந்தியாவுக்கு வருகை தந்ததை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

உலகின் தவிர்க்க முடியாத சக்தியாக இந்தியா மாறி வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் தயாரிக்கப்பட்ட பிரம்மோஸ் ஏவுகணைகளை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், லக்னோவில் இன்று வெளியிடுகிறார்.

உத்தரபிரதேசத்தில் பாதுகாப்பு தொழில் வழித்தடத்தில் இந்த ஏவுகணைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

உற்பத்தி முதல் இறுதிக்கட்ட சோதனை வரை முழு செயல்முறையும் உள்நாட்டிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், ஏவுகணையின் உந்துவிசைப் பிரிவின் புதிய கட்டிடத்தையும் திரு. ராஜ்நாத் சிங் திறந்து வைக்கிறார்.

இதில் உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத், மாநில அமைச்சர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.

>>>>>><<<<<

இந்தியாவின் வளர்ச்சி இயந்திரமாக வடகிழக்கு மாநிலங்கள் திகழ்வதாக மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் நேற்று, வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகம், அஞ்சல் துறை, தொலைத்தொடர்பு துறை ஆகியவற்றின் ஓராண்டு சாதனையை விளக்கி செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில், வடகிழக்கு மாநிலங்கள் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாகவும், அது புதிய இந்தியாவின் உணர்வை பிரதிபலிப்பதாகவும் அவர் கூறினார்.

சிக்கிம், அருணாச்சலப்பிரதேசம் மாநிலங்களில் முன்பு விமான நிலையங்கள் இல்லாத நிலை இருந்ததாகவும், தற்போது அருணாச்சலப்பிரதேசத்தில் மட்டும் 4 விமான நிலைங்கள் உட்பட மொத்தம் வடகிழக்கு மாநிலங்களில் 17 விமான நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

>>>>>><<<<<

வரவிருக்கும் குளிர்காலத்தில் வடஇந்தியாவில் காற்று மாசை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளை காற்று தர மேலாண்மை ஆணையம் ஆய்வு செய்தது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்த ஆணையத்தின் 25வது கூட்டத்தில், தரம் உயர்த்தப்பட்ட காற்று தர மேலாண்மை செயல்திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கார்பன் உமிழ்வை கட்டுப்படுத்துதல், பயிர்க் கழிவுகளை எரிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுவை சட்டப்பூர்வ வழிகளைக் கொண்டு கட்டுப்படுத்துதல் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

இன்று முதல் வரும் திங்கட்கிழமை வரை பசுமை பட்டாசுகளை மட்டுமே தில்லி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் விற்பனை மற்றும் பயன்படுத்த அனுமதிக்கும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவு குறித்தும் ஆணையம் விவாதித்தது.

>>>>>><<<<<

யூனியன் பிரதேசமான லடாக்கில், சமீபத்தில் ஏற்பட்ட வன்முறை மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்கான காரணம் தொடர்பாக நீதி விசாரணைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 24ஆம் தேதி லே நகரில் ஏற்பட்ட வன்முறை காரணமாக, 4 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, அங்கு 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதோடு, சமூகவலைதளங்களுக்கும், இணைய தொடர்புக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது.

இந்நிலையில், லே-யில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய லடாக் யூனியன் பிரதேச தலைமைச் செயலாளர் டாக்டர் பவன் கோட்வால், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி தலைமையில் இந்த விசாரணையை நடத்த உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளதாக கூறினார்.

உள்துறை அமைச்சகம் அமைத்துள்ள உயர் அதிகாரம் கொண்ட குழு, லடாக் மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் டாக்டர் பவன் கோட்வால் தெரிவித்தார்.

>>>>>><<<<<

வங்கிக் கடன் மோசடி வழக்கில் தேடப்பட்டு வரும் வைர வியாபாரி Mehul Choksi-யை இந்தியாவுக்கு நாடு கடத்த பெல்ஜியம் உச்சநீதிமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

பஞ்சாப் தேசிய வங்கியில் 13 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கிவிட்டு, அதனை திருப்பிச் செலுத்தாமல் Choksi வெளிநாட்டிற்கு தப்பிச் சென்றார்.

இதையடுத்து அவர், தலைமறைவு குற்றவாளியாக சிபிஐ நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டிருந்தார்.

அவர் பெல்ஜியத்தில் இருப்பது தெரியவந்ததை அடுத்து, முறைப்படி அவரை நாடு கடத்தி இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அந்நாட்டு நீதிமன்றத்தில் சிபிஐ மனுதாக்கல் செய்தது.

இதையடுத்து. கடந்த ஏப்ரல் மாதம் 11ஆம் தேதி பெல்ஜியம் காவல்துறையால் கைது செய்யப்பட்ட Choksi, தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவர் தாக்கல் செய்த ஜாமின் மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

>>>>>><<<<<

முல்லைப்பெரியாறு அணையிலிருந்து கேரளாவுக்கு உபரிநீர் திறந்துவிடப்படவுள்ளதாக தமிழக நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக, அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தற்போது, அணையின் நீர்மட்டம் 136 அடியாக உள்ள நிலையில், அணையை ஒட்டியுள்ள 13 மதகுகள் வழியாக கேரளாவிற்கு வினாடிக்கு ஐயாயிரம் கனஅடி வீதம் உபரிநீர் திறந்துவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150வது பிறந்தநாளை முன்னிட்டு, இம்மாதம் 31ஆம் தேதி, கஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை சைக்கிள் பயணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடல்தகுதி இந்தியா இயக்கத்தின் கீழ், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகம் இந்தப் பயணத்திற்கு ஏற்பாடு செய்துள்ளது.

அக்டோபர் 31ஆம் தேதி ஜம்மு கஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் தொடங்கும் சைக்கிள் பயணம், பஞ்சாப், தில்லி, ராஜஸ்தான், குஜராத், மஹாராஷ்ட்ரா, கர்நாடகா வழியாக 4 ஆயிரத்து 480 கிலோமீட்டர் தூரத்தை கடந்து, தமிழகத்தின் கன்னியாகுமரியில் அடுத்த மாதம் 16ஆம் தேதி நிறைவடையும்.

மற்றொரு சைக்கிள் பயணம், அருணாச்சலப்பிரதேசத்திலிருந்து தொடங்கி, அஸ்ஸாம், மேற்குவங்கம், பீகார், உத்தரபிரதேசம், மத்தியப்பிரதேசம் வழியாக சென்று, டிசம்பர் 31ஆம் தேதி குஜராத் மாநிலம் முந்தாவில் நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

மஹாராஷ்டிர மாநிலம், பால்கர் மாவட்டத்தில் உள்ள விக்ரம்காட் தாலுகாவைச் சேர்ந்த பழங்குடியின பெண்கள் தீபாவளிக்காக மூங்கிலைக் கொண்டு ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட விளக்குகளை வடிவமைத்துள்ளனர்.

சுற்றுச் சூழலுக்கு உகந்த இந்த விளக்குகளுக்கு கஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையும், வெளிநாடுகளிலும் தேவை அதிகரித்துள்ளது.

விக்ரம்காட் மூங்கில் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், இதற்காக பழங்குடியின மக்களுக்கு கடன் வழங்கியுள்ளது.

இந்த சங்கத்தில் உறுப்பினராக உள்ள பழங்குடியினர், இத்தகைய விளக்குகளை வடிவமைத்ததன் மூலம், 20 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளனர்.

உள்ளூர் மற்றும் அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து கிடைக்கும் மூங்கிலைப் பயன்படுத்தி, 11 கிராமங்களைச் சேர்ந்த 150-க்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்கள் இந்த விளக்குகளை தயாரித்துள்ளனர்.

>>>>>><<<<<

ஆப்கானிஸ்தானின் தென்கிழக்கு Paktika மாகாணத்தில் நேற்று, பாகிஸ்தான் விமானப்படையினர் நடத்திய வான் தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

இருநாடுகளின் எல்லையில் கடந்த வாரம் மோதல் ஏற்பட்டதை அடுத்து, இருதரப்பினருக்கும் 48 மணி நேர சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

இருப்பினும், அதையும் மீறி பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் பொதுமக்கள் அதிகமாக வசிக்கும் குடியிருப்பு பகுதிகள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டு வர தோஹாவில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் முடியும் வரை சண்டை நிறுத்தம் நீட்டிக்கப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் ஏற்கனவே கூறியிருந்தது.

>>>>>><<<<<

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டிக்கு இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

பிஷ்கெக்கில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா 2-1 என்ற கோல்கணக்கில் உஸ்பெகிஸ்தானை வென்றது.

இதன்மூலம், அடுத்த ஆண்டு சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய கோப்பை மகளிர் கால்பந்துப் போட்டிக்கு இந்தியா முதல் முறையாக தகுதி பெற்றுள்ளது.

**>>>>>><<<<<**

Denmark ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இந்த இணை 21-15, 18-21, 21-16 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் முஹமத் ரியான் – ரஹமத் இதாயத் இணையை வென்றது.

இன்று நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் இந்திய இணை, ஜப்பானின் Takuro Hoki – Yugo Kobayashi இணையை எதிர்கொள்கிறது.

அதேநேரத்தில், ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் லக்ஷ்யா சென், பிரான்ஸ வீரரிடம் வெற்றிவாய்ப்பை இழந்தார்.

>>>>>>END<<<<<